திட்டங்களின் அடிப்படையில் கிடைக்கும். அந்த வகையில் உதவிபெற வாய்ப்பிருக்கிறது.

முற்பகல் 9-30 திரு. எ. எம். இராஜா : தலைவர் அவர்களே, இப்படி பொறி இயல் பல்கலைக் கழகத்தை ஏற்படுத்தும்போது, நம்முடைய மாநில அரசால் நடத்தப்படுகின்ற, மாநில அரசுக்கு உட்பட்ட பொறியியல் கல்லூரிகளை இதோடு இணைப்பதோடு மட்டுமல்லாமல், மத்திய அரசால் நடத்தப்படுகின்ற பொறியியல் கல்லூரிகளையும் இந்தப் பல்கலைக் கழகத்துடன் இணைத்து, மாநில அரசின்கீழ் கொண்டு வர அரசு முயற்சி மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அது தனியாக விவாதிக்கப்படவேண்டிய ஒன்று. மாநில அரசு சார்பாக நடைபெறுகின்ற கல்லூரிகளையும் தனியார் துறையின்கீழ் வருகிற கல்லூரிகளையும் இதன்கீழ் கொண்டுவரவேண்டுமென்று குறிப்பு இருக்கிறது. ரீஜினல் இன்ஜினீயரிங் காலேஜ் மத்திய அரசினுடைய உதவியோடு நடைபெற்று வருகிறது. இன்னும் சில ஆண்டுகளில், அதன் முழுத் தன்மையும் மாநில அரசுக்கு வர இருக்கிறது. அந்த நிலைமையிலேயே அது இந்தப் பல்கலைக்கழகத்தின்கீழ் வராது ஐ.ஐ.டி.-யை பொறுத்த அளவுக்குத் தனி முயற்சிதான் எடுக்கவேண்டும். அதைத்தனியாகப் பரிசீலிக்கவேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இம்மாதிரி அக்ரிக்கல்ச்சரல் யூனிவர்சிட்டிகள் பல மாநிலங்களில் இருந்தன. தமிழ்நாட்டிற்குக் கொண்டுவந்தோம். அதேபோல் டெக்னலஜி யூனிவர்சிட்டி எந்த எந்த மாநிலங்களில் இருக்கிறது? மத்திய அரசு அதுமாதிரி பல்கலைக் கழகம் வைத்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா.நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதன் முழு விவரங்கள் என்னிடத்தில் இல்லை. வட மாநிலங்களில் ஓரிரண்டு இருப்பதாக எனக்குத் தகவல். அண்மையிலே, ஆந்திர மாநிலத்திலே இப்படி பல்கலைக் கழகம் வேண்டுமென்ற முயற்சியை எடுத்து, அதற்கான சட்டத்தை நிறைவேற்றி விட்டார்கள். இந்திய அரசு ஒப்புதல் கிடைக்கப் பெறாமல் இருக்கிறது. அங்கே தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் அமைக்கின்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

துணைவேந்தர்கள் மாநாடு

***507.** வினா—திரு. சு. துரைசாமி:—மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென் மாநிலத்துணை வேந்தர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்டுள்ள முடிவுகள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள் மாநாட்டு முடிவுகள் பற்றி அரசுக்கு அதிகார பூர்வமான தகவல் வரவில்லை.

திரு. ஆ. பரந்தாமன்:—தலைவர் அவர்களே, டெல்லி பல்கலைக் கழகத்தில், கல்வித் துறையிலே, சீர்திருத்தம் செய்திருக்கிருர்கள். அதன் விளைவாக இன்றையதினம், சிறந்த மருத்துவ நிபுணர்கள், பொறி இயல் நிபுணர்கள் இனி வர இருக்கிற ஆண்டுகளிலே வடக்கேதான் அதிகம் வருவார்கள் என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. இந்த விவகாரத் தைப்பற்றி இன்றையதினம் தென் மாநிலத் துணைவேந்தர்கள் மாநாட்டிலே பரிசீலிக்கப்பட்டதா என அறிய விரும்புகிறேன்.]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:—தலைவர் அவர்களே, பல்வேறு பொருள்கள்பற்றி துணை வேந்தர்கள் மாநாட்டிலே பரிசீலனை செய்திருக்கிருர்கள். அவை பத்திரிகைச் செய்திகளாக வெளி வந்திருக் கின்றன. சென்னைப் பல்கலைக் கழகத்திலேயும் மதுரைப் பல்கலைக் கழகத்திலேயும் பாடத் திட்டங்களையும் புதிய நிலைகளுக்கேற்றவாறு மாற்றி யமைப்பதற்கான முயற்சி எடுக்கப்பட்டு, தனித்தனியாகக் குழுக்களை எல்லாம் அமைத்திருக்கிருர்கள். அந்த முறையிலே மாறுதலைச் செய்துகொண்டுவருகிருர்கள். காலத்திற்கேற்று, நாட்டிற்குத் தேவையான முறையில், பல்கலைக் கழகப் படிப்பு தர பல்கலைக் கழகங்கள் ஈடுபட்டிருக்கின்றன.

திரு. நா. வீராசாமி:—தலைவர் அவர்களே, யூனிவர்சிட்டி ஒரு அட்டான மஸ் பாடியாக இருந்தாலும் இப்படி துணைவேந்தர்கள் மாநாடுகளிலே எடுக்கின்ற முடிவுகளை அரசாங்கத்திற்கு அனுப்பாவிட்டால், அரசாங்கம் மேற்கொள்ளவேண்டிய திட்டங்கள் பற்றி ஒன்றும் செய்ய முடியாமல் போய்விடும். ஆக, இம்மாதிரியாக துணை வேந்தர்கள் மாநாடுகளிலே எடுக்கப்படுகின்ற முடிவுகளை உடனுக்குடன் சம்பந்தப்பட்ட அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கும்படி, இனிமேலாவது துணை வேந்தர்களை நம்முடைய அரசாங்கம் கேட்டுக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:—தலைவர் அவர்களே, மாநாட்டு விவரங்களை அவர்களாக அனுப்பி வைக்கமாட்டார்கள். வேண்டு மாஞல், நாம் கேட்டால், அதனுடைய சிபாரிசுகள், தகவல்கள் அனுப்பி வைப்பார்கள். செய்தித்தாள்களில், மற்றவற்றில் படித்து, சிலபல சீர் திருத்தங்களைச் செய்யவேண்டுமென்ற முயற்சியை மேற்கொண்டிருக் கிருர்கள் என்று தெரிந்துகொண்டோம். அதைக்கூட, கட்டாயமாக ஒவ்வொரு பல்கலைக் கழகமும் செய்ய வேண்டுமென்ற நிலைமை இல்லை. பரிந்துரைகள் என்ற முறையில் முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ் வொரு பல்கலைக் கழகமும் அவற்றை எந்தமுறையில் நடைமுறைப் படுத்தலாம் என்பதைப் பற்றி எண்ணிக் கொண்டிருக்கிருர்கள்.

Civic Taxes.

***508Q—Thiru N. DENNIS** : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state —

(*a*) whether there is any proposal under the consideration of the Government to review the Civic Tax Pattern in this State ; and